# பிளாஸ்டிக் பயன்பாடு தடை குறித்து விழிப்புணர்வு



பிளாஸ்டிக் தடை குறித்து அரியலூர் நிர்மலா காந்தி நடுநிலைப் பள்ளி மாணவ,மாணவிகளிடம் விளக்கிய தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள்.

அரியலூர்,டிச.19: அரியலூர் நகர்ப் பகுதி பள்ளிகளில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் பிளாஸ்டிக் பயன்பாடு தடை குறித்த விழிப்புணர்வு மற்றும் கண்காட்சி புதன்கிழமை நடைபெற்றது.

அரியலூர் ரயில் நிலையம் அருகேயுள்ள நிர்மலா காந்தி நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் பேசுகையில், பிளாஸ்டிக் பொருள்களானது எளிதில் மக்காத தன்மை கொண்டவை. சுற்றுச்சூழலுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தி, மண் வளத்தையும் அதிகளவில் மாசுபடுத்தக் கூடியவை.

இத்தகைய பிளாஸ்டிக் பொருள்கள் நிலத்தில் தேங்குவதால் மழை நீர் நிலத்தடிக்குள் செல்வது தடைபட்டு நிலத்தடி நீர் மட்டம் அதிகளவில் பாதிக்கப்படுகிறது. அதே வேளையில் சுற்றுப்புறத்தில் ஆங்காங்கே கிடக்கும் பிளாஸ்டிக் பொருள்களில் தேங்கும் மழைநீர், டெங்கு, மலேரியா போன்ற நோய்களை பரப்பும் கொசுக்களின் உற்பத்திக்கு காரணமாக அமைகிறது.

எனவே தமிழக அரசு பொது மக்கள் நலன்கருதி இவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களின் பயன்பாட்டிற்கு ஜன.1 முதல் தடை விதித்துள்ளது. மீறி பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களை பயன்படுத்தும் வணிக நிறுவனங்கள், கடைகள், உணவகங்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும், அதையும் மீறி தொடர்ந்து பயன்படுத்துவோரின் நிறுவன உரிமை ரத்து செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்களும் இது போன்ற பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடுகளை தவிர்த்திட வேண்டும். கடைகளுக்கு செல்லுதல், உணவுப் பொருட்கள் வாங்குதல் போன்ற அன்றாட நேர்வுகளில் பிளாஸ்டிக் பைகளைத் தவிர்த்து துணிப்பைகளை பயன்படுத்திட வேண்டும்.

எனவே மாணவ, மாணவியர்கள் நூறு சதவீதம் பிளாஸ்டிக் பொருள்கள் பயன்பாட்டைத் தவிர்த்து தங்களது குடும்பத்தார் மற்றும் சுற்றத்தாரிடத்திலும் பிளாஸ்டிக் பொருள்கள் பயன்பாட்டை தவிர்த்திட ஊக்குவித்திட வேண்டும் எனத் தெரிவித்தனர். தொடர்ந்து பிளாஸ்டிக் பொருள்களால் ஏற்படும் தீமைகள் குறித்து கலை நிகழ்ச்சிகள் மூலமும், நவீன வாகனம் மூலமும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். நவீன வாகனம் மூலம் ஒளிப்பரப்பு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாணவ,மாணவிகள் ஆர்வத்துடன் பார்த்தனர்.